பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4

11 08 2025 MONDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று திறந்து வைத்தார்.

- எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

- தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தியின்போது சுற்றுச்சூழலுக்கு உகந்த சிலைகளை பயன்படுத்த வேண்டும் என்று மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

- அமெரிக்கா – ரஷ்யா இடையிலான பேச்சுவார்த்தைகளில் யுக்ரைன் மற்றும் ஐரோப்பிய யூனியன் கண்டிப்பாக ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

- உலக விளையாட்டுப் போட்டியில் ஸ்னூக்கர் பிரிவின் ஆடவர் காலிறுதிக்கு இந்தியாவின் Shivam Arora, Sourav Kothari முன்னேற்றியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், 2014-ஆம் ஆண்டு முதல், தற்போது வரை 350 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக புதிய வீடுகள் கட்டப்பட்டிருப்பதாகவும், 2004 முதல் 2014-ஆம் ஆண்டு வரை அவர்களுக்கென்று வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை என்றும் கூறினார்.

பல்வேறு மாநிலங்களை சேர்ந்த உறுப்பினர்கள் ஒரே குடியிருப்பில் வசிப்பது நாட்டின் ஒருமைப்பாட்டை பிரதிபலிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போதுமான வீட்டுவசதி இல்லாதது, வாடகை உள்ளிட்டவற்றின் மூலமாக அரசின் செலவினம் அதிகரிக்க காரணமாக இருந்ததாக பிரதமர் கூறினார்.

*இக்குடியிருப்புகளில் சூரிய மின்சக்தி கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்த பிரதமர், சூரிய மின்சக்தியை பயன்படுத்துவதில் நாடு புதிய சாதனை படைத்திருப்பதாக குறிப்பிட்டார்.*

*மரபுசாரா எரிசக்தி உற்பத்தி, சிறப்பான கழிவு மேலாண்மை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த கட்டட வடிவமைப்பு இக்குடியிருப்புகளில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.*

*மேலும், இந்த கட்டுமானப்பணியில் ஈடுபட்ட பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.*

*மாநிலங்களவை இன்று காலை கூடியபோது, அவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ், கேள்விநேரத்திற்கு பிறகான விவாத நேரத்தை நடத்த முயற்சி மேற்கொண்டார்.*

*அப்போது, பீகார் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் உள்ளிட்ட சில விவகாரங்களை முன்வைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.*

*அதையடுத்து பேசிய திரு ஹரிவன்ஷ் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 29 ஒத்திவைப்பு தீர்மானங்களை அளித்திருப்பதாகவும், 18 தீர்மானங்கள் நீதிமன்றம் சார்ந்தவை என்பதால், அவற்றை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.*

*கடந்த வாரம் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளியால் அவையின் 62 மணிநேர செயல்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக அவர் கூறினார்.*

*கேள்விநேரம் மற்றும் அதன் பிறகான விவாத நேரத்தை நடத்த உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தருமாறும், அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாம் என்றும் திரு ஹரிவன்ஷ் கேட்டுக்கொண்டார்.*

*அதன்பிறகும், அமளி தொடர்ந்த நிலையில், மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.*

*மக்களவை இன்று காலை கூடியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.*

*எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து 14 நாட்களாக அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பது நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்திற்கு ஏற்புடையது அல்ல என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.*

*அதன் பிறகும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், ஒருங்கிணைந்த வனவிலங்குகள் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் பதிலளித்தார்.*

*அதன்பின்னரும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபடவே, பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்திவைக்கப்படுவதாக திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.*

*இதனிடையே, பீகார் வாக்காளர் பட்டியல் தீவிர சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, தேர்தல் ஆணையம் நோக்கி பேரணியாக செல்ல முயன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்.*

*எதிர்க்கட்சிகளின் போக்கு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் போலியான தகவலை பரப்பி வருவதாகவும், இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்றும் குற்றம் சாட்டினார்.*

*<<<<<<>>>>>>*

*தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தியின்போது நீர்நிலைகளை மாசுபடுத்தாத வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிலைகளை பயன்படுத்துமாறு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பக்தர்களை கேட்டுக்கொண்டுள்ளது.*

*இதுதொடர்பாக, தமிழக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், களிமண் கொண்டு பாரம்பரிய முறையில் சிலைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ், பிளாஸ்டிக், தெர்மோகோல் கொண்டு சிலைகள் தயாரிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் எந்த வடிவிலும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று மாசு கட்டுப்பாட்டு வாரியம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*மேலும், மாவட்ட நிர்வாகம் குறிப்பிட்டுள்ள இடங்களில் மட்டுமே சிலைகள் கரைக்கப்பட வேண்டும் என்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.*

<<<<<<>>>>>>

*தமிழகத்தின் திருப்பூரில் ஆயிரத்து 427 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய பணிகளுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.*

*விழாவில் பேசிய அவர், தமிழகத்தில் வீராறு, நல்லாறு, ஆணைமலையாறு திட்டம் தொடர்பாக, கேரள மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

<u>*(Sound Byte – ஸ்டாலின் – 32 Sec.)*</u>

<<<<<<>>>>>>

*மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் சார்பில் நவீன தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.*

*நாடு முழுவதும் டிஜிட்டல் கட்டமைப்புக்கு வலுசேர்க்கும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*இதுதொடர்பாக, புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பி எஸ் என் எல் நிறுவனத்துடன் எரிக்சன், Qualcomm, Cisco மற்றும் Nokia நிறுவனங்கள் உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளன.*

<<<<<<>>>>>>

*நாடு முழுவதும் கைவினைக்கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.*

*இதன் ஒருபகுதியாக, தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில், மரச்சிற்பங்கள் செய்வதற்கான பயிற்சி இன்று தொடங்கியுள்ளது.*

*இப்பயிற்சியில் கலந்துகொண்டது மகிழ்ச்சி அளிப்பதாகவும், இது எதிர்காலத்தில் தமது வாழ்வை மேம்படுத்தும் என்றும் பயற்சியில் கலந்துகொண்ட ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Sound Byte – பயனாளி – 24 Sec.)*

*<<<<<<>>>>>>*

*அமெரிக்கா – ரஷ்யா இடையிலான பேச்சுவார்த்தைகளில் யுக்ரைன் மற்றும் ஐரோப்பிய யூனியன் கண்டிப்பாக ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் வெளியுறவுக்கொள்கை தலைவர் திருமதி Kaja Kallas தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக, ஐரோப்பிய யூனியன் வெளியுறவு அமைச்சர்களுடன் காணொலி வாயிலாக இன்று பேச்சு நடத்த இருப்பதாக அவர் கூறியுள்ளார்.*

*வரும் 15-ஆம் தேதியன்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடின் பேச்சுவார்த்தை மேற்கொள்ள உள்ள நிலையில் Kaja Kallas இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*இதற்கிடையே, யுக்ரைன் நாட்டின் 120 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*யுக்ரைன் மீது ரஷ்யா 100 ட்ரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும், அவற்றில் 70 ட்ரோன்கள் விமானப்படையினரால் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் அந்நாடு கூறியுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*சியோல் நகரில் தென்கொரியா, சீனா, ஜப்பான் நாட்டு வேளாண் அமைச்சர்கள் பங்கேற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தை இன்று நடைபெற்றது.*

*கோவிட்-19 நோய் தொற்று காரணமாக கடந்த 7 ஆண்டுகளாக இந்த பேச்சுவார்த்தை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.*

*Incheon நகரில் ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் வேளாண் அமைச்சர்கள் மாநாடு சமீபத்தில் நடைபெற்ற நிலையில், தற்போது இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*துருக்கியின் மேற்குப்பகுதியில் Balikasir மாகாணத்தில் நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது, ரிக்டர் அளவில் ஆறு புள்ளி ஒன்றாக பதிவானது.*

*<<<<<<>>>>>>*

*வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ நா பொதுச்சபை கூட்டத்தின்போது, பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் முடிவு அறிவிக்கப்படும் என்று ஆஸ்திரேலியா பிரதமர் திரு Antony Albanese தெரிவித்துள்ளார்.*

*பிரான்ஸ், பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்க முடிவடுத்துள்ள நிலையில், ஆஸ்திரேலியா பிரதமர் இதனை கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*உலக விளையாட்டுப் போட்டியில் ஸ்னூக்கர் பிரிவின் ஆடவர் காலிறுதிக்கு இந்தியாவின் சிவம் அரோரா, சவ்ரவ் கோத்தாரி முன்னேற்றியுள்ளனர்.*

*சீனாவின் Chengdu -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், ஸ்வீடனின் Kevin Zarekani -ஐ 5-1 என்ற புள்ளிக்கணக்கில் சிவம் அரோரா வென்றார்.*

*மற்றொரு ஆட்டத்தில் பிரிட்டனின் Zac Cosker -ஐ சவ்ரவ் கோத்தாரி தோற்கடித்தார்.*

*<<<<<<END>>>>>>*